## காங்கயம் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை திரு.கு.கனிராஜ்

**ந.க.எண். 1198/ 2023/ எப்1** **நாள்.26.06.2024**

**பொருள்:** மனை உட்பிரிவு அனுமதி – காங்கயம் நகராட்சி / கிராமம் – ரீ.ச.எண்.52/3B–ல் 1215 ச.மீ பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. மனுதாரர் திரு.M.முருகசாமி அவர்களது இணையதள விண்ணப்பம் எண்.7KUJF6D9/2023/TCP நாள்.31.08.2023.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 7KUJF6D9/2023/TCP நாள்.31.08.2023
3. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
4. அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ–4(3) நாள் 04.05.2017.
5. காங்கயம் சார்நிலை கருவூலம் இணையதள செலுத்துச்சீட்டு எண். 20240624008234 மற்றும் 20240624007976 நாள் 25.06.2024.
6. காங்கயம் நகராட்சி கருவூல பற்றுச்சீட்டு எண்.158/158/01/24-25/0004957 மற்றும் 158/158/01/24-25/0004970, நாள் 25.06.2024.

*********

**உத்தரவு:**

காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.சர்வே எண்.52/3B–ல் 1215 ச.மீ பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவு அமைக்க அனுமதி கோரி பார்வை 1–இல் காணும் திரு.M.முருகசாமி அவர்களது விண்ணப்பம், பரிசீலினை செய்யப்பட்டு பார்வை 2–இல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைஉட்பிரிவிற்கு SWP/DTCP/Tiruppur/LAYOUT No.242/2023 என எண்ணிடப்பட்டு சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பார்வை 3–ல் காணும் அரசாணையின் படியும், பார்வை 4–இல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி நிலப்பயன்பாடு மாற்றம் செய்வதற்கான உரிய கட்டணம், பார்வை 5–இல் கண்டுள்ள செலுத்துச்சீட்டின் படி அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.மேற்படி மனைஉட்பிரிவிற்கு நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் பார்வை 6–இல் கண்டுள்ள

செலுத்துச்சீட்டின் படி நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே காங்கயம் கிராமம் ரீ.சர்வே எண்.52/3B–ல் 1215 ச.மீ பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**ஆணையாளர்**
**காங்கயம் நகராட்சி**

**இணைப்பு**

1. பார்வை 2–இல் கண்டுள்ள செயல்முறை உத்திரவு நகல்.
2. மனை உட்பிரிவு வரைபடம்.

**பெறுதல்**:

திரு.M.முருகசாமி,
கதவு எண்.38,
சின்னாய்புதூர்,
திருப்பூர் ரோடு,
காங்கயம்.
காங்கேயம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்.

**நகல்:**

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.
2. சார்பதிவாளர், காங்கயம் (வரைபட நகலுடன்) அவர்களுக்கு தகவலுக்காக.
3. வருவாய் ஆய்வாளர், காங்கயம் நகராட்சி (வரைபட நகலுடன்) அவர்களுக்கு தகவலுக்காக.
4. நகரமைப்பு ஆய்வாளர்.